AUG. 1914.

உ

Reg. No. M. 1080.

சிவமயம்.

தமிழன்.

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

TAMILIAN.

A Monthly Tamil Journal.

Pandit, S. Muthuswami Pillai, Managing Editor.

Vol. II. | 1089 ஆடி. | No. 11, 12.

பொருளடக்கம்.

பக்கம்.

1. மாலைப் பொழுது 321
2. வாசிப்பும் அறிவு முதிர்ச்சியும் 323
3. மலைநாடும் தமிழும் 325
4. சிறுவர்க்கான சிறந்த மொழிகள் 329
5. தேக ஆராய்ச்சி 331
6. துர்ச்சனர் சகவாசம் துயருடைத்தே ... 333
7. மூன்றுவித ஆகாரங்கள் 336
8. உத்தம பக்தரின் லக்ஷணம் 338
9. சொல்வது வேறு செல்வது வேறு ... 341
10. ஐரோப்பிய யுத்தம் 343
11. யுத்த டயரி 348

Printed at the 'BHASKARA' PRESS, and
Published by S. Muthuswami Pillai, Trivandrum.

World Renowned Atank Nigrah Pills.

உலகபிரசித்தி பெற்ற

ஆதங்கநிக்ரக மாத்திரைகள்

நோயற்றவாழ்வே வாழ்வு

அவ்வாழ்வுக்கு

ஒரேரூபாய்தான் செலவு

எங்கள் ஆதங்க நிக்ரஹ மாத்திரைகளைப் போல் பூர்ண சுகத்தையும் அழிவடையா பலலத்தையும் மநோஹரமான அழகையும் கொடுக்கும் மருந்து, வேறு இல்லவே இல்லை. இரத்தசுத்தி செய்யவும் இதுவே நல்ல ஔஷதம்.

32. மாத்திரைகள் அடங்கிய டப்பி 1-க்கு ரூபாய் ஒன்றே.

வேண்டுவோர் கீழே காணும் விலாசத்தாருக்குளழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர்கோவிந்தஜி,
22, பிராட்வே,
மதிராஸ்.

உ

சிவமயம்.

தமிழன்.

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

"தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்; மற்றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு" — குறள்.

பண்டிதர் S. முத்துசுவாமிப்பிள்ளை—பத்திராதிபர்.

தொகுதி II } 1089. ஆடி மீ. { பகுதி XI & XII

மாலைப்பொழுது

ஸ்ரீமாந் தி. லக்ஷ்மண பிள்ளையவர்கள், B. A.

கிழக்கே மலைகள் அடுக்கடுக்காய்க் கிளர்ந்
தொன்றின் மேலொன் றுயர்ந்து திரண்டு,
நித்தியப் பொருளின் நீங்காத் தியானத்
தொத்தொரு மித்த முனிக் கூட் டம்போல்
அமர்ந்தன; வடபால், தென்னஞ் சோலை
செறிந்த வளைப்பும், திகழ்தரு மேடும்,
பரிதியின் கதிர்கள் காணாப் பள்ளமும்
தென்படும்; ஊடே, அமிர்தம் நிறைந்து
சென்றது போலத் தெளிந்து மதுரித்
தன்பாய்த் தாங்கும் அழகிய தரைமீ
தானந்தங் கொண்டாடிச் செலும்போல்,
நேரே செல்ல நேரா தவன் போல்,
வளைந்தும், சுழித்தும், மறிந்தும், தங்கியும்,
நீலமும் அல்லியும் நீங்கா தலர,

மணந்தரு நீர்மலி யாறு மறைந்து
போந்தது; தெற்கே பொலிந்தெழும் வயல்கள்
காலத் தோடு கதிர்நெல் சுமந்து
ஞாலத் தோர்க்கு நல்லுண வளித்தன.
மேற்கே, சிலவிடம் விதம் விதம் பூத்துக்
காய்த்துக் கனிந்த கவின் உடை மரங்கள்
படர்ந்த பந்திகள் பற்பல கண்படும்.
அப்பால் தென்றும் அணிமணல் குன்றுக்
கப்பால் தோன்றும் அலையெறி கடலே.
மேலே வீசிய விண்ணவர் திரைபோல்,
சீர்பெறு நீலம் திகழ்தரத் தோன்றும்
வானப்பரப்பு, அதன் நெற்றிமேல் வாய்ந்த
திலகம் போலும் செவ்விய கதிரோன்,
வான நாட்டின் வயங்கிய கோமான்,
பல்நிற மேகப் பரிசா ரகருடன்
செல்வன் அம்மேலைச் செழுங்கடல் பாய;
அன்ன வேளையில், தன்னிறம் மாறிச்
செக்கச் சிவந்து திரைகடல் மேனியும்
மலையும், மரமும், மாநிலப் பரப்பும்,
தொலையும் அடுப்பமும் துலங்குமா றெங்கும்
செங்கதிர் பரப்புவான், செந்நிற மாக்குவான்.
மன்னன் எப்படியோ மன்பதை அப்படி
என்பது போல், அவன் ஏகும் வழியெலாம்
புடைசூழ் கொண்டலும் பொன்னிறம் பெறவே,
தெண்ணீர் முழுகும் பெண்முகத் தைப்போல்,
ஆனந் தக்கடல் ஆடு மாதவர் போல்,
ஓடியே இளைத்த ஒப்பிலாப் பரிபோல்,
தேடின செல்வம் தெரியா தொழிவபோல்,
உலகத் தவர்க்காய் உண்மையாய்த் திண்மையாய்
உழைத்தவர் உழைப்பெலாம் ஓய ஒதுங்கி,
ஈடும் பீடும் ஏற்றுச் செல்வ போல்,
அழகிய சூரியன் ஆழிபாய்ந் தனனே.

தி. லக்ஷ்மண பிள்ளை.

வாசிப்பும் அறிவு முதிர்ச்சியும்.

ஸ்ரீமாந் T. P. மாணிக்கவாசகம் பிள்ளையவர்கள்.

---

(1) எவ்விதத்திலும் சிறந்து விளங்கும் இவ்விருபதாம் நூற்றுண்டில் அறிவின் அருமையும் அதற்கு இன்றியமையாது வேண்டப்படும் வாசிப்பும் பலருடைய கவனத்தைக் கவர்ந்திருக்கின்றனவென்பதில் ஐயமில்லை. ஆனாலும் அக்காலத்தில் நடந்ததாகக் கூறப்படும் சரித்திரங்களைப் பார்ப்பினும், வாசிப்பினாலுண்டாகும் மனோநிலை நன்கு வெளியாகும். ரிச்சாட்ஸன் என்பவரது நாவலொன்றை ஒரு கருமான் சில ஜனங்களுக்கு வாசித்துக் காட்டியபொழுது, அதன் கதாநாயகன் நாயகிகளுக்கு நேர்ந்த வெற்றியைக்கேட்ட ஜனங்கள் தாங்கள் கேட்பது கதையென்பதை மறந்து கோவிலுக்குச் சென்று மணியடித்துத் தங்களது அளவற்ற மகிழ்ச்சியை மிக்க ஆரவாரத்தோடு கொண்டாடினார்களென்பதை ஸர் ஜான் ஹெர்ஷல் என்பவர் தெரிவித்திருக்கின்றார். இராமர் போர்க்களத்தில் உதவியின்றி நிற்பதைப் பிரசங்கியார் கூறக்கேட்ட குலசேகர ஆழ்வார் தாம் கேட்பது கதை யென்பதை மறந்து போர்க்கோலம் பூண்டு உதவி செய்யப் புறப்பட்டாரென்றும், அது கண்டு ஆச்சரியப்பட்ட பிரசங்கியார் சமயோசிதமாக இராமரது வெற்றியை உரத்த சத்தத்துடன் எடுத்துக் கூறிய பின்புதான் அவர் பிரயாணத்தை நிறுத்தினாரென்றும் ஒரு கதை கேட்கப்படுகின்றது.

(2) நல்ல புஸ்தகங்கள் நம்முடைய குறைவுகளை மறக்கவோ அல்லது நீக்கவோ எவ்வளவு பயன் படுகின்றனவென்பது யாவரும் அறிந்ததாகும். உதவியற்றவர்களுக்கு உதவியாகவும், துக்கப்படுகிறவர்களுக்கு இன்பமாகவும், சிநேகிதரில்லாதவர்களுக்குச் சிநேகிதராகவும் இருக்கக்கூடியவை இப்புஸ்தகங்களைத் தவிர வேறில்லை. அவை அஞ்ஞானமாகிய இருளை எளிதில் நீக்குகின்றன. உலகத்தாரால் கைவிடப்பட்டுப் பரிதாப நிலையிலிருப்பவர்களுங்கூட, புஸ்தகங்களால் கவலைக்கே ஆளாகாதிருத்தல் இயலும். இது பற்றியே,

"உறுங்கவலொன், றுற்றுழியும் கைகொடுக்குங்
கல்வியினூஉங்கில்லை, சிற்றுயிர்க்குற்ற துணை"

எனக் குமர குருபரரும் கூறியிருக்கின்றார்.

(3) நெல் முதலியவற்றின் விலை இக்காலத்தில் மிகவும்உயர்ந்து விட்டதென நம்மனோர் பேரிரைச்சல் உண்டு பண்ணுகின்றார்கள். ஆனால், இக்காலத்தைப்போல புத்தகங்கள் ஒரு காலத்திலும் சகாயமாயிருந்ததில்லை. அச்சடிக்கு முறை தெரிந்தபின், எவ்வளவு ஏழையும் உயர்ந்த கருத்துக்களடங்கிய புத்தகங்களையும் வாங்க இடமுண்டாய்விட்டது. அறிவுள்ள நண்பர் அரச சகவாசம் கிடைப்பது துர்லபமாயினும், அதற்குரிய புத்தகங்களை வாசிப்பதினாலே அவற்றிற்கிணையான இன்பம் அடையலாம். எவ்வளவு ஏழையும் ஆறணாவில் ஓர் குறளை வாங்கிக்கொண்டால், திருவள்ளுவருடன் பல நுட்ப விஷயங்களைக் கிரகித்துப் பயன் பெறலாம்; இராமாயணம், மகாபாரத முதலியவற்றைக்கம்பர், வில்லி முதலியோரிடம் கேட்டுக்கொள்ளலாம்.

" தவலருந்தொல் கேள்வித் தன்மையுடையா
ரிகலிலரெஃகுடையார் தம்முட்குழீஇ
நகலினினிது " வேறுமுண்டோ? தேவர்பதியும் கல்வியாலுண்டாம் இன்பமளிக்க வல்லதோ!

(4) சிலர், நேரம் போகவேண்டுமென்று புத்தகங்களைப் படிக்கின்றார்கள். அது சிலாகிக்கத் தக்கதன்று. ஒவ்வொருவனும் தனது ஜீவிய நோக்கத்துக்குப் பயன்படத்தக்க புத்தகங்களை நன்கு வாசித்து சாரமல்லாததை நீக்கி, சாரத்தை மாத்திரம் கிரகித்து வைத்துக் கொள்ளவேண்டும். படிக்க அவகாச மில்லை யெனல் யாருக்கும், பொருந்தாது. எவ்வளவு சுறுசுறுப்புள்ளவனும் சுமார் பதினைந்து நிமிஷமாவது ஏகாக்கிரசித்தமாய் வாசித்தால், பெரிய ஆசிரியர்களின் சிறந்த நூல்களனைத்தையும் நாலைந்து வருடத்தில் முடித்துவிடலாம். அவ்வாறு பெறப்படும் பயன் கொஞ்சமல்ல. ஏனெனில் ஒவ்வொரு நூலாசிரியனும், தன் அநுபவ முழுவதையும் வாசிப்போனுக்குக் கொடுத்துவிடுகின்றான்.

(5) தற்காலத்தில் தோன்றும் கதைகளை மாத்திரம் ஒருவன் ஓயாது வாசித்துக்கொண்டிருத்தல் நலமல்ல. தினந்தோறும் வேலை செய்து களைத்திருக்கும் பொழுது மாத்திரம் சிறிது வாசித்தல் பெருமகிழ்ச்சியும் பயனுமளிக்கும். ஏனையகாலத்தில், செய்யுள் வாசித்தலின் நன்மை அதிகமுண்டு.

(6) ஒவ்வொரு வீட்டிலும் அவரவர்கள் விரும்புகின்ற புத்தகங்களைச் சேர்த்து வைக்கவேண்டியது அவசியமாகும். அங்ஙனஞ்

செய்தல் எந்த ஏழைக்கும், பிரியமிருப்பின், இயலும். அனுவசிய மான செலவைச் சுருக்கியாவது அல்லது நிறுத்தியாவது நல்ல புத்த கங்களில் செலவிடலாம். "புத்தகமில்லாத வீடு ஆத்துமா இல்லாத உடம்புக்கு நிகரென (Cicero) சிசரோ கூறுகின்றார். ஐசுவரியம் அந்தஸ்து அறிவு முதலியவற்றில் சிறந்த (Macaulay) மெக்காலே அக்காலத்து உடனிருந்த அறிஞரைப் பார்க்கிலும் புத்தகங்களையே அதிகமாக விரும்பினாராம். (Gibbon) கிபனென்பவர் இந்தியா தேசத் தின் அளவற்ற செல்வத்துக்குப் பதிலாகக் கூட, கல்வியின் மீது தனக் குள்ள ஆசையை விடமாட்டேனென்றார். "ஓர் நல்ல புத்தகத்தைப் புதிதாய்ப் படிப்பது, புதிய சிநேகிதனைச் சம்பாதிப்பது போலும், படித்த புத்தகத்தையே திரும்ப வாசிப்பது பழைய நண்பனோடு அளவளாவுவது போலுமிருக்கின்றது" என்று (Oliver Goldsmith) ஆலிவர் கோல்டு ஸ்மித் ஓர் காலத்தில் கூறினர். (Bacon) பேகன் (Reading maketh a full man) வாசிப்பொன்றே ஓர் மனிதனை எவ் விதத்திலும் நிறைந்தவனாக்குகிறது எனப்பொருள்படும்படி கூறினர். இதுகாறும் கூறியவற்றுள், பத்திரிகை வாசித்தலும் மிகுந்த பயன ளிக்குமென்பதும் சொல்லாமலே அமையும்.

> "தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத்தூறுமறிவு"—திருக்குறள்.

நெல்லை—மாணிக்கவாசகன்.

மலைநாடும் தமிழும்.

ஸ்ரீமாந் N. சுந்தரமய்யரவர்கள்.

> இன்றெனக் கருளி யிருள்கடிந்துள்ளத் தெழுகின்ற ஞாயிறே போன்று
> நின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தேன், நீயலால் பிறிது மற்றின்மை
> சென்று சென்றணுவாய் தேய்ந்துத் தேய்ந்தொன்றும் திருப்பெருந்துறை யுறை சிவமே
> ஒன்று நீயல்லை யன்றி யொன்றில்லை யாருன்னை யறியகிற் பாரே.

என்றவாறு எப்பொருளுந்தானுகி எவற்றினும் புறமாகி மனோ வாக்குக் கெட்டாத சுத்த அத்துவித பரதேவதையாகிய கடவுளை முன்னிட்டு

மலைநாடும் தமிழும்.

என்ற வியாசத்தைச் சிறிது எழுதுவான் புகுந்தேன்.

சரித்திரம் ஒருசிறிதும் அறியாத சிலர்தமிழுக்கு ஒரு சம்மந்தமுமில்லாத மலையாள தேசத்தில் நால்வர் சேர்ந்து "தமிழ் !, தமிழ் !" என்றோர் ஆரவாரம் செய்கின்றீர்கள், தமிழுக்கும் இந்நாட்டிற்கும் வெகுதூரம், ஆகையால் நீவிர் இங்ஙனம் முயற்சிப்பது வீணெனக் கூறி யேதப்படுத்துவர். அவர் கூற்றுக்கு மாற்றுரையே இவ்வியாசத்தின் கருத்தாமாகலின் தமிழுக்கும் இந்நாட்டிற்கும் உள்ள சம்மந்தத்தை ஒரு சிறிது ஆராயத் தொடங்குவோம்.

பழைய நூல்களில் "தமிழகம்" என்று வழங்கப்படும் தேசம் சேர சோழ பாண்டிய அரசர்களால் ஆண்டுவரப்பட்டதென்றும் அது 13 நாடுகளாகப் பிரிக்கப் பட்டிருந்ததென்றும் அறிகிறோம். மேற்கண்ட 13 நாடுகளாவன:—பாண்டி, தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேண், பூழி, பன்றி, அருவா, அருவா வடதலை, சீதம், மலாடு புன்னாடு என்பனவாம்.

இவற்றுள் பாண்டி, தென்பாண்டி யென்பன பாண்டியநாடும், குட்டம், குடம், கற்கா, வேண், பூழி, மலாடு என்பன சேரநாடும்.ஆம்.

இச்சேர நாட்டிலும் குட்டநாடு, கற்காநாடு, வேணாடு இம்மூன்றும் சேர்ந்து திருவிதாங்கோடு எல்லைக்குள் அடங்குமென்று காலஞ்சென்ற கனகசபைப்பிள்ளையவர்கள் தமது "Tamils 18 hundred years ago" என்னும் அருமை நூலில் நிரூபித்திருக்கிறார்கள்.

இனி மேற்சொன்ன 13 நாடுகளிலும் தமிழே வழங்கி வந்ததென்றும், பின்னரோ அத்தமிழ்ப்பாஷையின் திரிபுகளான மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு முதலிய பாஷைகள் உண்டாயினவென்றும், காலஞ்சென்ற பிரபல வித்வான் ராய் பகதூர் P. சுந்தரம் பிள்ளையவர்கள்

பல்லுயிரும், பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் னிருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமுந் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல வாயிடினும்,
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

எனத் தமிழ்த் தெய்வ வணக்கம் கூறியுள்ளார்.

இது இவ்வாறாக, சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு எனப் பிரிந்திருந்தாலும் இவர்களில் பலம் மிகுந்தோர் மற்றவர்களை அடக் துத்துரத்துவதும், அவர் நாட்டைக் கைப்பற்றுவதுமே வழக்கமா யிருந்தன, திருநெல்வெலி ஜில்லாவைச் சேர்ந்த அநேக கிராமங்கள் சேரமன்னனைச் சேர்ந்திருந்தன வென்பது யாவருக்கும் உடம்பாடே யாம். நாங்குநேரித் தாலூக்கா திருக்குறுங்குடிக் கோயில் சிலா சாசனத்தால் நாங்குனேரி, அம்பாசமுத்திரம், தென்காசி, சங்கரநயி னார் கோயில் முதலிய தாலூகாக்கள் திருவிதாங்கோட்டைச் சேர்ந்த வையென அறியக் கிடக்கின்றது. நான்குனேரி யென்பதற்கும் நாஞ்சினாடு என்பதற்கும் தாது ஒன்றாம். சேரன்மாதேவி என்னும் பெயர் அவ்விடத்தில் சேரன் அதிகாரத்தை ஸ்திரப்படுத்துகின்றது.

மலையாங்குளம், என்ற கிராமத்தின் பெயரையும், அதிலுள்ள கோயில் இன்றும் திருவிதாங்கூர் ஆட்சியில் உட்பட்டிருப்பதையும், குற்றாலம், சங்கரநயினார்கோயில், திருக்குறுங்குடி, வள்ளியூர் திருச் செந்தூர் முதலான இடங்களில் உள்ள ஆலயங்களுக்காகத் திருவாங் கூர் அரசாங்கத்திலிருந்து செலவாகும் பொருளையும் உற்றுநோக்கு வார்க்கு இரண்டுக்குமுள்ள சம்மந்தம் தெளிவாகும்.

இவ்வண்ணமே பாண்டியரும் சோழரும் இந்நாட்டில் படையெ டுத்து, தங்கள் பெயரால் பட்டணம் முதலியன ஸ்தாபித்திருக்கிறார் கள்.

நாகர்கோயில் பக்கத்தில் சோழபுரம் என்னுமோர் கிராமம் இருக்கிறது. அப்பெயர் நோக்கின் சோழன் படையெடுத்து இந் நாட்டரசனை வென்று தன் பெயரால் ஓர் ஊர் உண்டாக்கினான் என் பது புலனாம். கோட்டாற்றின் புராதனப்பெயராகிய மும்முடிச் சோழ புரம் என்றநாமமும் எனது இக்கொள்கையைப் பலப்படுத்தும்.

இவ்விதமே பாண்டியன் அணை, அழகியபாண்டிபுரம், வேம்பத் தூர், வேம்பனூர் (இவ்விரண்டும் தென்திருவிதாங்கூரிலுள்ள குக்கி ராமங்கள்) வேம்பன் (பாண்டியன்) நாட்டுக்காயல் என்பனவும் இதற் குப்போதிய சான்றாம்.

ஆகவே இருவருக்கும் பாஷை யொன்றானது பற்றி இவர் தம் மில்கலந்து உரையாடுவதற்கு இடமும் சமயமும் நேர்ந்திருக்கின்றன.

இம்மட்டோ! ஐங்குறுநூறும், சிலப்பதிகாரமும், புறப்பொருள்

வெண்பாமாலையும், புறநானூற்றுப் பாக்களிற் சிலவும்; மலைநாட்டுப்புலவர்கள் இயற்றியவையன்றோ!

மலையாளத்தில் ஆதிகாலந்தொட்டே வேறு பாஷை உண்டாயிருக்குமாயின் இந்நாட்டில் உதித்த சேரமான் பெருமாள் நாயனாரும் இளங்கோவடிகளும், குலசேகராழ்வாரும் தமிழில் தங்கதைகளை இயற்றுவானேன்?

சிலாசாசன பரிசோதகராகிய ஸ்ரீமான் கோபிநாதராயரவர்களும் பின்வருமாறு கூறுகின்றார்கள். "இதுகாறும் யான் பரிசோதித்த அளவில், தமிழ்மொழி யில்லாமல் மலையாளம் என்னும் பாஷையிலேயே எழுதிய பழஞ்சாஸனம் ஒன்றும் கிடைத்திலது. நடு மலையாள தேசத்தும் தமிழிலன்றி வேறு பாஷைகளில் கிடையா. இந்நாட்டாருடைய பழய கணக்குகளும் பத்திரங்கள் முதலியனவும், தமிழிலேயே காணப்படுகின்றன. காடடர்ந்த மலைகளால் செந்தமிழ் நாட்டினின்றும் பிரிபட்டு, தன் வழியே மாறிக்கொண்டு வந்த மலைநாட்டுத்தமிழை மலையாளமென்று பெயரிட்டழைக்கின்றனர்"

நம் மலைநாட்டில் சாதாரணமாய்க்கேட்கும் பதங்களாய--"பொக்கம், கிழி, இங்ஙனே, பாணி, இறையிலி" முதலிய பதங்களுக்குச் சாதாரணத் தமிழர் பொருளறியார். அவை இலக்கியங்களில் பெரும் புலவர்களால் உபயோகப் படுத்தப் பட்டு வந்தன.

"மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம்
போலறிவோமென்றுள்ள பொக்கங்களே பேசி"

என்னும் பாடலின் பதப்பிரயோகத்தை நோக்குக.

இனி இவ்விதம் பதங்களைப் பெரிதுப் தேடியெடுத்து, அவைகளின் பிரயோகங்களையும் உரைக்கப் புகின், அஃதோர் பெரிய சரித்திரமாக முடியுமாகலின் விரிவஞ்சி இம்மட்டோடு நிறுத்துவோம்.

இதுகாறும் கூறிய சிறிதளவிலேயே, மலையாள தேசத்திற்கும் தமிழ்ப்பாஷைக்கும் வெகுதூரம் என்பார் உரை பொருளறியாப் புல்லுரையே யாமென்பதும், இந்நாட்டில் செந்தமிழ் வழங்கி வந்ததுமன்றி, செந்தமிழ்ப் புலவர் பெருமக்களும், பிறந்து வளர்ந்து மேம்பட்டார் என்பது பெற்றோம்.

N. சுந்தரமய்யர்.

சிறுவர்க்கான சிறந்த மொழிகள்.

ஸ்ரீமாந் T. K. இராம பத்ர கனபாடிகள்.

பொய் பேசலாகாது, யாருக்கும் தீங்கு செய்யலாகாது, அடிக்கடி வீண் வார்த்தை பேசுவதும், சத்தியம் செய்வதும் பிசகு. வீண் கதைகளை வாசித்து காலத்தை வியர்த்த மாக்காதே! எப்போதாகிலும் உனக்கு சாவகாசமிருந்தால் தேச சரித்திரங்களையும், சுலோகங்களையும் படி. அவைகள் புத்தியைப் பெருக்குவதுடன் வாசிக்க இன்பமாயிருககும். புண்ணிய பாபங்களின்னவை யென்று உனக்கு ஞானம் தோன்றிய வுடனே மத கிரந்தங்களைப் படிக்கத் தொடங்கு. பகலெல்லாம் வாசித்த விஷயங்களை இரவில் மனனம் செய். போஜனம் செய்வதில் அலக்ஷியமாயிராதே. பசி வேளையில் உண்ணாத அன்னம் பலனைத் தராது. உண்ணும்போது பதார்த்தங்களை மிதமாய் உட்கொள்ளு. போஜனம் செய்யும்போது வம்பு பேசாதே. உன் வஸ்திரங்களையும் பல்லையும் அழுக்கின்றி வெளுப்பாக வைத்துக் கொள். உண்ட உடனே கடவுளைத் தொழு. எந்தக் காரியத்திலும் கவலையும் இன்பமும் கலந்தே யிருக்கவேண்டும். விளையாடும்போது கோபத்தையும், பணத்தையும், கொண்டு போகாதே; ஏனெனில், பணத்தை யடையவேண்டிய நோக்கத்தால் சச்சரவுண்டாகி இணக்கம் போய்விடும்! எந்தப்பாஷையைக் கற்றாலும் அதன் இலக்கணத்தையும், அப்பாஷையின் வசன காவியங்களும் பாக்களுமெழுதிய மகா மேதாவிகளின் சரித்திரங்களையும், படிக்கவேண்டும். ஈசுவர பக்தியொன்றில்லையானல் உன் படிப்பெல்லாம் வியர்த்தமாய் விடும். சங்கத்திலிருக்கும் போதும் பெரியோர்கள் முன்னும் கொட்டாவி விடாதே. சிரிக்கும்படி அவசரம் நேரிட்டால் தனிமையாக அப்பாற் சென்று சிரிக்கவேண்டும். உன் நகத்தை நீயே பல்லால் கடித்துக் கொள்ளாதே. ஒருவன் படிக்கும் கடிதத்தை நீ ஒளிந்து பார்ப்பது பிசகு. ஏதேனும் ஓர் கடிதம் பிரித்து வைத்திருந்தால் அது உன்னுடையதல்லாத விஷயத்தில் நீ அதை படிக்கலாகாது. யாராவது எந்த விஷயத்தையாவது உன்னைக் கேட்டாலன்றி நீ அவ்விஷயத்தைப் பற்றி உன்னபிப்பிராயத்தை வெளியிடுவது அஸந்தர்ப்பம். தடித்தனமாய் உடம்பை வளைப்பதும் கையை மடக்குவதும் கூடாது. காலை நீட்டிக்கொண்டிருப்பது பிசகு. நீ ஒருவர் கோராமல் பாடத் தொடங்குவதும் ஈசலடிப்பதும் கட்டாயமாய்த் தவிர்க்க வேண்டும்.

எப்போதும் அலாதியாயிருந்து புஸ்தகத்தைப் படிக்க வேண்டுமே யன்றி நாலுபேர்களின் முன்னிலேயில் படிக்கத் தொடங்குவதினுல் பயனில்லே. நீ விசாரப்பட்டுக்கொண்டும் கோபத்துடனும் ஓர் கூட்டத்திலிருக்கலாகாது. உட்கார்ந்திருக்கும்போது காலே யாட்டுவதும் கண்ணேச் சிமிட்டுவதும் குற்றமாகும். உட்காரும்போது முழங்காலேத் துணியால் கட்டிக் கொள்ளுகிறதும் காலே யெடுத்துத் தடை மேற் போட்டுக்கொள்ளுகிறதும் அயோக்யமான காரியம். நீ மாணுக்கனுக இருக்கின்ற இந்தக்கால முதலே அடக்க வொடுக்கமாகவும், தாய் தந்தையர் பெரியோர், இவர்களிடத்தில் விசுவாஸத்துடனும் இருந்து வரவேண்டும். அப்படியிருந்தால் தான் நீ எந்த உத்தியோகத்தில் அமர்ந்தாலும் உனக்கு நல்ல "யசஸ்" உண்டாகும். ஏனென்ருல் "யசஸ்" என்பது நம்முடைய நடத்தையையும் குணத்தையும் அறிந்த உலகத்திலுள்ளவர்களால் நமக்களிக்கப்படும், உயர்நல மமைந்த ஸன்மான மல்லவா? நாம் யாருக்கு எந்த ஸமயம் என்ன உதவி செய்யவேண்டுமென்று தோன்றுகிறதோ அந்த ஸமயம் அவருக்கு அந்த உதவியைச் செய்து முடித்து விடவேண்டும். ஏனென்ருல் நமது வாழ்நாளின் முடிவையும் உலகத்திலுள்ள தரித்திரர், ஸ்ரீமான்கள் இவர்களேயும், துன்ப இன்பங்களேயும் கவனித்துப் பார்க்கும் போது நமக்கும் இந்த 'உதவி' யென்னும் மனிதனுக்கும் நெருங்கிய பாந்தவ்யம் இருக்கவேண்டுமென்றே ஏற்படுகின்றது! ஆதலால் இந்த மனிதனை மட்டும் நாம் கைவிடக்கூடாது. எப்போதும் நம்மால் கூடுமானவரை இந்த மனிதனுடைய நட்பையே கோரி வருவோமாஞல் நாம் வெகு ஜல்தியில் இவ்வுலக வாழ்வு என்னும் உத்தியோகத்தில் ப்ரமோஷனடைவோம். நாம் கற்ற நூல்களும், மற்றப்படி கற்கவேண்டிய— நாம் கற்க விரும்புகின்ற— நூல்களும் இந்த நண்பனேயே நாம் உயிர்த்தோழனுகக் கொள்ளவேண்டுமென்று வற்புறுத்துகின்றன. இந்தக்கொள்கையானது எல்லா மதத்தாராலும், மஹான்களாலும் கையாளப்பட்டது. ஆகவே இந்த மனிதனே நேசிப்போமேயாஞல் நமக்கு இவ்வுலக வாழ்வு வெகு இன்பமாக முடியும். ஆனல் நாம் என்ன என்ன விதமாய் வாழ விரும்புகின்ருேமோ அந்த அந்த விதமாகவே இந்த மனிதனே நேசிக்கவேண்டும். அப்படி நேசிப்பதில் நமது மதாசாரங்களுக்கு ஹானி வரக்கூடாமல் பார்.

T. K. இராமபத்ர கனபாடிகள்.

தேக ஆராய்ச்சி.

ஸ்ரீமாந் V. S. அருணாசலம் பிள்ளையவர்கள்.

(185-வது பக்கத் தொடர்ச்சி.)

இப்பிராணிகள் குடலில் மாத்திரமல்ல, தேகத்தின் மற்ற அம்சங்களிலும் பிரவேசிக்கின்றன, அவை இரத்தம் சர்மம் சுவாசகோசம் முதலியவையே.

இரத்தமானது தேகமுழுவதும் வியாபித்திருக்கும் அநேகமான நாடிகளின் வழியாய்ப் பிரவேசித்து ஒவ்வொருவிதமான தேகஅணுக்களையும் போஷிப்பித்தபின் அவ்வணுக்களினின்றும் விடுபடுகிற அழுக்கு வஸ்துக்களை அல்லது விசர்ஜனங்களைச் சுமந்துகொண்டு மறுபடியும் ஹ்ருதயம்சென்று தன்னைச் சுத்தப்படுத்திக்கொள்வது தெரிந்தவிஷயமே. அதெங்ஙனமெனில்,

பூமியைச்சுற்றிக் கரையின்றிக் கடவுள் ஆக்ஞையால் நிலைநிற்கும் சமுத்திரமானது, சூரியவெப்பத்தினால் ஆவியாய் மாறி மேகமாய்ப் பிறகு மாரியாய் வருஷித்துப் பூமியெங்கும் வியாபித்திருக்கும் நால்வகையோனி எழுவகைத்தோற்றம் எண்பத்துநான்குலக்ஷம்பேதங்களாயுள்ள ஜீவகோடிகட் கெல்லாம் அவையவைகட்குத் தக்கபடி போஷணமளித்து, அவற்றினின்றும் விடுபடப்படும் மலமூத்ரம் முதலிய விசர்ஜனங்களையும் மற்றெவ்விதமான அழுக்குகளையும்சுமந்துகொண்டு, சின்னீர்த்துளிகள்பெருகிச் சின்னீர்த்தாரையாகவும் சின்னீர்த்தாரை பெருநீர்த்தாரையாகவும் பெருநீர்த்தாரை சிறுவாய்க்கால்களாகவும் சிறுவாய்க்கால்கள் பெருவாய்க்கால்களாகவும் பெருவாய்க்கால்கள் அருவிகளாகவும் அருவிகள் ஓடைகளாகவும் ஓடைகள் நதிகளாகவும் நதிகள் பெருநதிகளாகவும் பெருகி யொன்றுசேர்ந்து மறுபடியும் சாகரம்சேர்ந்து, அதனுடன்கலந்து, கதிரவனெதிர்சென்று அவனது கிரணங்களாற் சுத்தியாக்கப் பெற்று, மேகமாய் மாறிப் பிறகும் மாரியாய் வருஷித்துக் கொண்டிருப்பது போல, நாமுட்கொள்ளும் போஜனபதார்த்தங்கள் இரைப்பையிற் சென்று ஜீர்ணீகரிக்கப்பெற்று, அவற்றின் சாராம்சங்கள் அணுப்பிரமாணமாய் அதி

ருசியமான சிறு நாடிகளிற் பிரவேசித்து, ஒன்று சேர்ந்து, திருசிய மான பெருங்கோசங்களில் நுழைந்து, பிறகு பெருநாடிகளிற்பிரவே சித்துப் பெருநதியைப்போற் பெருகி,ஹ்ருதயமென்னும் சமுத்திரத் தில்விழ்ந்து, அங்கிருக்கும் இரத்தத்துடன்கலந்து, வேறு நாடிகளின் வழியாய் நுரையீரல்சென்று பரவி, அங்குச் சுவாச கோசவழிகளாற் செல்லும் சூர்ய கிரணங்களை யொத்த வாயுவி னம்சங்களாற் சுத்தி செய்யப்பெற்று, மறுபடியும் ஹ்ருதயஞ்சென்று, பெரிய இரத்த நாடி வழியாய்ச் சிறிய இரத்த நாடிகளிற் சென்று, அவற்றின் வழி யாய் அவற்றினும் சிறிது சிறிதாய்ப் பிறகு அணுப்பிரமாணமாய்ப் பிரிக்கப்பட்டுச் சரீரமெங்கும் வியாபித்திருக்கப்பட்ட இரத்த நாடி களிற் பிரவேசித்து தேகமெங்கும் உள்ளும்புறம்பும் ஏற்பட்டிருக்கும் அவயவாதிகளின் பரமாணுக்களின் உற்பத்தி, வாழ்வு, அழிவு என் னும் மூன்றவஸ்தைகட்கேற்ப அவைகட்குப் போஜன பதார்த்தங் களை யளித்து, அவற்றினின்று விடுபடும் விசர்ஜன வஸ்துக்களைச் சுமந்து சென்று, மேல் விவரித்தபடி நாமுட்கொள்ளும் போஜன ரசங்களைப் பருகிச் செல்லும் நாடிகளுடன் கலந்து, மறுபடியும் ஹ்ரு தயம் சென்று, நுரையீரலிற சுத்தீகரிக்கப்படுகின்றது.

இத்தொழில், சர்வக்ஞனுகிய பராபரக்கடவுளின் ஆக்ஞையால் தேகத்துள், சதா நடந்தேறி வருகின்றது. இப்படி இவ்வணுப்பிர மாணமான ஜீவிகளின் உற்பத்திக்கும் வாழ்க்கைக்கும் சென்று கொண்டிருக்கும் இரத்தத்தின் கதியும், அவைகளில் அழிந்துபோன வற்றைப் பருகிவரும் இரத்தத்தின் கதியும் மந்தமானவையென்று யோசிக்கவிடமில்லை. நமது ஒருகையைப்பரப்பி முலைக்கண்ணின் சமீபமாய் இடது பக்கத்தின் மார்பின்மேல் வைத்துக்கவனிக்கில் யாதோ ஒருஜீவி நமது மார்பினுள்ளிருந்து மார்பின்பக்கத்தில் முட்டு வதாய்த் தெரிந்துகொள்ளலாம். அந்த ஜீவியே ஹ்ருதயம். இந்த ஹ்ருதயமானது சங்கீத சாஸ்திரத்தின் ஏகதாளத்தின் அக்ஷரகதி யைப்போல் ஒரே காலகதியாய்ச் சிசு பால ஆரோக்ய வார்த்தக்ய மென்னும் தேகாவஸ்தைகட்கேற்ப அதிக துரிதமாகவும், சமதுரித மாகவும் துடித்துக்கொண்டிருக்கும். கர்ப்பவாஸ காலத்தில் ஒரு நிமிஷத்தில் 150 முதல் 200 வரையும், ஜனனம் முதல் இரண்டு வருஷங்கள் வரையில் 140 முதல் 110 வரையினும், மூன்று முதல் ஐந்து வருஷங்களில் 110 முதல் 100 வரையும், 6 முதல் 14 வருஷங்

கள் வரையில் 100 முதல் 86 வரையும், 14 முதல் 21 வருஷங்கள் வரையில் 86 முதல் 75 வரையும் பிறகு 75 முதல் 65 வரையும் துடித்துக்கொண்டிருக்குமெனத் தெரிந்திருக்கிறோம். ஹ்ருதயம் எவ்வளவு அதிகமாகத் துடிக்கின்றதோ அவ்வளவு துரிதமாக இரத்தம் ஹ்ருதயத்தினின்று தேகபாகங்கட்கும் அவைகளினின்று ஹ்ருதயத்திற்கும் ஓடிக்கொண்டிருக்கின்றது.

சத்வகுணம் நிரம்பியுள்ள பரிசுத்த மனதின்கண் ரஜோகுணமும் தமோகுணமும் எப்படி வந்து சேர்ந்து ஆகாம்ய சஞ்சித பிராரப்தத்திற்குக் காரணமாய் ஜனன மரண துன்பத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கின்றனவோ அப்படிப்போலச் சதா முன்னும் பின்னும் ஓடிக்கொண்டிருக்கும் பரிசுத்த இரத்தத்தோடு தேகத்தின்புறம்பாயிருக்கும் பரமாணுப்பிராணிகள் வந்து சேர்ந்து, தேகத்திற்குப் பலவித வ்யாதிகளையுண்டுபண்ணி, இடைவிடாத்துன்பத்திலாழ்த்தும் மார்க்கங்களிற் சிலவற்றைக் கூறத்தொடங்குவோம். (தொடரும்)

(செந்தமிழ்)

துர்ச்சனர் சகவாசம் துயருடைத்து.

மலர்தலையுலகின் மன்னியமாந்தர்
பலதொழிற் பண்பும் விகலமதுடைய
அறிவின்செறிவும் உள்ளவர்களென்பது
தேற்றம்பெற்ற ஊற்றமொழியல்லவா.

இங்ஙனமாய நாம் ஐக்கியமாக எப்பொழுதும் நடத்தலே நாயகத்தன்மையாகும். எப்படியென்றால் ஒருவரையொருவர் கெடுத்துத்தான் வாழவேண்டுமென்ற எண்ணம் எள்ளளவுமின்றி நாமிருந்தால் நமக்குச் சரியாக யாருளர். திருஷ்டாந்தமாக அன்னிய தேசத்தவர்கள் எவ்வளவு ஐக்கியம் பாராட்டி எடுத்த தொழில்களைத் தொடுத்து முடிக்கும் பெருந்தகையினராயிருக்கின்றார்கள். இப்படியான நிலையுள்ளவர்களாக நாம் நடந்தால் நம் தேசமுயர்ச்சியடையாதா? நம்பெயர் விளங்காதா? எவ்வித முயற்சிகளும், செவ்விது சேருமன்றோ?

இவைகளைத் தேர்ந்து "மறந்தும் பிறன்கேடு சூழற்க" என்ற ஆப்த வாக்கை ஆதாரமாகக்கொண்டு நடக்க முயற்சியாமை பேதமையல்லவா? கற்றவர்மாட்டும் அத்தகை துர்க்குணமடைதல் இழிவுடைத்தே. சாஸ்திரமுகத்தானும் கோத்திரமுறையானும் சற்பாத்திரவொழுக்குத் தலைமையதாக, அவற்றைத் தமக்கணிகலமாகக் கோடாது துர்க்குணம் பூண்டு பிறரைக் கெடுத்தல் அறியாமையின் பாலதல்லவா? அன்றி, "குலத்தளவே யாகுங் குணம்" என்ற வாக்கினிலக்கணமுந்தங்கி குணத்தானும் செயலானும் உயர்வு இழிவுகளை நாட்டின் ஒவ்வொருவர் தன்மையும் புலப்படுகின்றதே. துர்க்குணத்தானே துர்ச்செயலும் துர்வாசகமும் உண்டாகின்றன. துர்ச்செயலே இவற்றுள் அஞ்சவேண்டியவொன்றாகவுள்ளது.

துர்க்குணமென்றால் கெட்ட குணமென்று பொருள் விளக்கிக்கொள்க. இது மனஅழுக்காகி அறிவினை ஒளிரவிடாது தடைப்படுத்துந் தன்மையது. அறிவு கிளர்ச்சிபெற்றவர்பால் இக்குணங் காணப்படமாட்டாது. உறுப்புத் தோற்றமும் வெறுப்பில் மாற்றமுமுடையராய் உலகினரை வஞ்சிக்கும் கீழோர்க்கு அஞ்சவேண்டியதாவசியமாகும். மிருகங்களினும் விஷஜந்துக்களினும் தீயினும கொடியராகிய துராகிருதர்க்கே வொதுங்கி வொருபுடை மறைதல் வேண்டும். "ஆ! மனிதரை மனிதர் கெடுத்தல் என்ன புத்தி! என்ன துணிவு! மனிததேகத்தோடுகூடிய இம்மிருகவகுப்பார் கதி யாதாகும்? தலைமை வகித்த தண்ணளியோரே! ஆப்த அறிஞர்களே! இவர்கள் கூட்டம் எவ்வளவு கெடுதியை விளைவிக்கின்றது. எவ்வளவு துயரை யடைவிக்கின்றது. எங்கும் இலைமறை காயென இடையீடின்றி விராவிய இத்தகையோர்க்கு இன்மொழி புத்திபுகட்டுதல் கூட சாலாத காரியமாகின்றதே. அவர்களுக்கு திருத்தங் கூறும் அறிவுடை மொழிகளால் மற்றோர் வருந்த நேரிடுகின்றதே.

அன்றியும் சற்புத்தி புகட்டுவோர் புலிநோய் நீக்கி யதற்கிரையாவார் போலாகின்றனரன்றோ? துஷ்டர்க்கு விஷத்தன்மை யெங்கும் பரவியிருக்கின்றதே. மற்றுமவர் செய்கை மனத்தினிலெண்ணினும் சுடும் காணினும் கெடுக்கும். இதனைச் சரியென்பார் வேடப் பிரபுக்களும் நாடகமங்கையருமேயன்றிப் பிறருமுளரா.

காக்கை பிணத்தை விரும்புதல் போல மூர்க்கராகிய துர்த்தரைப் புகழ்தல் அன்னவரையொத்த மூர்க்கரன்றே? சற்குணச்

சார்புள்ள கனவான்கள் இவர்கள் ஜாலத்துட்படுதல் பெரு வெட்கமே. "குலம் பல பேசி நலமில்செயல் புரிநரர் நரகரே யாவர்". இவர்களைக் காணாது நீங்கவேண்டியதே முறையாகும். இவர்களுக்கு நன்றி செய்தால் தீமை விளையும். இப்போப்பட்டவர்கள் ஒருவன் ஒரு சற்காரியத்தில் பழகுவனாகில் எவ்விதத்திலேனும் கெடுதல் செய்ய முயலுவர். பிரத்தியக்ஷமாக நான் ஒரு அத்வைத சபையையாரம்பித்து நடத்தினேன். முன் கூறியதுபோலுள்ள வேடதாரிகள் அது இருந்த விடம் தெரியாம லாக்கிவிட்டார்கள். என்னென்று சொல்லுவேன். "என்னையே நொவனோ தன்னையே நோவனோ யாதுமுனையன்றி யுண்டோ" என்றபடி ஈசுவரார்ப்பணம் செய்துவிட்டேன். சொல்லு மனமும் செயலுமொன்றாகி அடுத்தாரைக் கெடுக்கும் கோடாரிக் காம்பு போன்றவர்களையும் வயசான் முதிர்ந்து அறிவான் முதிரா மடியர்களையும் ஒருக்காலும் நம்புதல் கூடாது. அசத்தியமே இவர்பாலுள்ளது. நல்லவர்மாட்டு இவை யர்வுமின்றெனக,

தீய தொழிற்கஞ்சார்கள். பிறர் பொருள் அபகரிக்க அஞ்சார்கள். மாசுடைவாக்கு பேசுதற் கஞ்சார்கள். இத்தன்மையுடையவர் பெரியவரா? "மனத்தால் மறுவிலரேனும் சேர்ந்த வினத்தானிகழப்படுவர்" என்றபடி தீயோர் சேர்க்கையானே நற்சனராற் றீங்குண்டாதலையும் தேர்க.

ஆகையால் துர்ச்சனர் கூட்டம் விட்டு நன்னிலையினராய் நடக்க யாவரும் முன்னிற்போமாக இதுவரையுந் தெரியத் தெளிய சாதாரண வாக்கியங்களாகக் கூறிப்போந்தவற்றானே தீத்திறச் சிந்தையுஞ் சொல்லும் செயலுமுடையவர்களை நம்புதல் கூடாதென்றும் அவர்கள் கூட்டத்தை வேட்டிடில் அஃது பெருந் திண்டாட்டமாகுமென்றும் இவ்வித இலக்கணமுடையோரே துர்ச்சனரென்றும் அன்னவரெங்கும் தங்கி சற்சனரையும் கெடுக்கத் தலைப்படுதல் கண்கூடாக உள்ளதென்றும் அவை யாவையும் அறிவின்மையாலுண்டாகின்றமை யொருதலையாகுமென்றும் இவற்றை நன்கு நாடி யாவரும் துற்சனர் சாவகாசத்தை விரும்பாமல் சற்சனராக வாழவேண்டியதே முக்கிய கடைமை.

இவை யாவிற்குந் திருஷ்டாந்தம்.

"செங்கமலப் போதலர்ந்த செல்விபோலும் வதனந்
தங்குமொழி சந்தனம்போலும்—பங்கியெறி

கத்தரியைப்போலு மிளங் காரிகையை வஞ்சமனக்
குத்திரர்பால் மூன்று குணம் "

" கொம்புளதற்கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக்காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தங்கண்ணிற் றெரியாத் தூரத்து
நீங்குவதே நல்லோர் நெறி "

" வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
யாங்கதனுக்காகாரமானற் போற்—பாங்கறியாப்
புல்லறிவாளர்க்குச் செய்த வுபகாரம்
கல்லின்மேலிட்ட கலம் "

" சொல்லின் பொருளறிந்து சொல்வழியைச் சாராதார்
நெல்லின் பதர்போலே நிற்பார் பராபரமே "

L. S. லெக்ஷ்மணபிள்ளை, வடசேரி.

மூன்றுவித ஆகாரங்கள்.

ஸ்ரீமாந் D, சங்கர ஸ்தாணுபிள்ளையவர்கள்.

ஆகாரமானது அந்தந்த தேசங்களுக்குத் தக்கபடி பலவிதமாய் வித்தியாசப் பட்டிருப்பினும் யாவரும் பொதுவாய் அநுஷ்டிக்க வேண்டிய சில விதிகள் உண்டு. அவற்றைக் கீழே விவரிப்போம். நெல், சோளம், கம்பு, கேள்வரகு, சாமை, கடலை உளுந்து பருப்பு முதலிய தானிய வர்க்கங்களும், உருளைக்கிழங்கு, ஏத்தன்வாழைக்காய் சேனை, காச்சல் கிழங்கு, கருணைக் கிழங்கு, வெண்டைக்காய், கத்தரிக்காய் பூசனிக்காய் முதலிய காய்கறி வர்க்கங்களும், மஞ்சள், மிளகு ஜீரகம், உள்ளி, பூடு, கடுகு, உப்பு, புளி முதலிய பதார்த்தங்களும், தயிர்' பால், வெண்ணெய் முதலிய இன்னும் அநேக பொருள்களும் பக்ஷண சாதனங்களாய்க் கொள்ளப்பட்டிருக்கின்றன. இவைகளில் அதிகமான கசப்பும், அதிகமான புளிப்பும், அதிகமான எரிப்பும் அதிகமான கொழுப்பும் இல்லாத பசுவின்பால் போன்ற பால் வர்க்கம் பேயம்பழம் போன்ற பழவர்க்கம், ஆரைக்கீரை,

முசிட்டைக்கீரை இவை போன்ற கிரை வர்க்கம், கர்ணே, சீனி, முதலிய கிழங்கு வர்க்கம், சாமை, அரிசி முதலியவைகளைப் பொடிசெய்த மாவர்க்கம் இவைகளும் இன்னும் இவை போன்ற தாருட்டிய காரிகளல்லாத அநேகம் பதார்த்தங்களும் சாத்விக ஆகாரத்தைச் சேர்ந்தவை. ஆனால் மேற்குறித்த சாத்விக ஆகார பதார்த்தங்கள் யுத்தகளத்தில் போர் செய்யும் யுத்த வீரர்களுக்கோ அல்லும் பகலும் உழைப்பாளிகளாகவிருக்கும் வேலைக்காரர்களுக்கோ அதிகடினமான வேலைகளைச் செய்யுந் தொழிலாளர்களுக்கோ பொருந்தா. பின் எத்தன்மையுடையவருக்குப் பொருந்துமெனில், லௌகிக தர்மத்தை விட்டு சதா சாதுத்தன்மையோடு ஈஸ்வர காலக்ஷேபஞ் செய்யும் சாதுக்களுக்கு மிகவும் பொருத்தமானவை. பக்தியானது மேன்மேற் பெருகி மனது வசப்பட்டு பரிசுத்தமான ஆத்மீக ஜீவியத்தைக் கைப்பற்றவேண்டியவர்கள் அதிக கொழுப்பையும் அதிக பலத்தையுங் கொடுக்கக் கூடிய ஆகாரங்களைப் புஜிப்பார்களாகில் இரக்தமூர்க்கமுந் துடிப்பும் அதிக்கிரமித்து மனதடங்காது அகங்காரம் பலத்துக் காமக் குரோதர்களாகி, பக்தியின் அபிவிர்த்தி கெட்டு மோக்ஷ சாம்பிராஜ்ய பதவி கிடையாமல் கணக்கற்ற ஜென்மங்களை யெடுத்துக் கஷ்டப்பட்டுழலவேண்டிய வர்களாய்த் தீர்வார்கள்.

இரண்டாது இராஜஸ ஆகார பதார்த்தங்கள். இவைகள் சுறுசுறுப்பையும் பலத்தையும் உண்டுபண்ணும். கம்பு, பச்சரிசி, கோதுமை, கடலை, உளுந்து, சோளம், உருளைக்கிழங்கு, நெய், தயிர், பருப்பு, வெண்டைக்காய், சேனை, காச்சில் கிழங்கு, சேப்பன் கிழங்கு தேங்காய்ப்பால், எத்தன் வாழைக்காய், நல்லெண்ணெய், ஜாலாமிசிரி முட்டை, இறைச்சி மீன், இவைபோன்றவைகள் மேற் சொன்னவாறு அல்லும் பகலும் வேலை செய்யும் உழைப்பாளிகளுக்கு மிகவும் பொருத்தமானவை.

மூன்றாவது தாமஸ ஆகார பதார்த்தங்கள். இவைகள் மௌட்டியத்தையும் பிணியையும் சோம்பலையும் உண்டுபண்ணும். கிரமத்தில் ஜீர்ணிக்காத மாட்டிறைச்சி பன்றியிறைச்சி முதலிய மாமிஸ பதார்த்தங்களும் அதிகப்புளிப்பும் அதிகக்கசப்பும் அதிகம் நாட்சென்றதும் அதிக ஊசலும் கிருமிகள் வைத்ததுமாகிய அதிகம் புளித்த பழயது, அதிகம் புளித்ததான தயிர், அழுகிய பதார்த்தங்கள் பழங்கறிகள், புழுத்த ஊறுகாய்கள், சூடோடல்லாத சமையல்

செய்து ஆறிப்போன பதார்த்தங்கள் இவை போன்றவை தாமஸ குண ஆகாரத்தைச்சேர்ந்தவைகள்.

ஆகையால் துன்மார்க்கம் நீங்கி சன்மார்க்கம் ஓங்கி சாத்விகத் தன்மையர்களாகி பக்தி யோகிகளாக விருக்க விரும்புவோர் அதிகமான எரிப்பும் அதிகமான கைப்பும் அதிகமான புளிப்பும் அதிகமான இனிப்பும் அதிகமான கொழுப்பு முடைய பதார்த்தங்களைப் புசியாமல் சதா சாத்விக ஆகாரத்தைக் கிரமமாகப் புஜித்து மிக்க நாட்களிலும் விரதங்களை அனுஷ்டித்துக் கொண்டு சற்சாது சங்கம் செய்து பக்தியோகத்திற்கு வேண்டிய நூல்களை வாசித்து பெரியோர் முகாந்திரமாக சந்தேகங்களை நிவிர்த்தி பண்ணி அதன்படியே சிறிது சிறிதாக வேலை செய்து அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரக்கடமைப்பட்டிருக்கிறார்கள்.

D. சங்கரஸ்தாணு பிள்ளை

உத்தம பக்தர்களின் லக்ஷணம்.

ஸ்ரீமாந் D. அகஸ்தியலிங்கம் பிள்ளை அவர்கள்.

அர்ச்சுனனானவன் சாக்ஷாத் கிருஷ்ண பகவானைப் பார்த்து சுவாமி ! தேவரீரைப் பக்தி செய்து வரும் பக்தர்கள் இறுதிக் காலத்தில் மோக்ஷ மடைவார்களென்று திருவாய் மலர்ந்தருளினீர்கள். அவ்விதமான பக்தர்கள் உயிரோடிருக்கும் பொழுது அவர்களை அடியேன் அறிந்துகொள்ளுமாறு அவர்களுடைய குணவிசேஷங்களை எடுத்துக்கூறி என்னை அனுக்கிரகிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள பகவான் கூறுகிறார்.

அருச்சுன நம்முடைய பக்தனானவன் சகல பூதங்களிடத்திலும் துவேஷமின்றி யிருப்பான். தனக்குச் சமானமாகிய பேர்களிடத்தில் மைத்திரீ என்னப்பட்ட சிநேகம் பாராட்டுவான்! தீனர்களாயிருக்கிறவர்களிடத்தில் கருணை செய்வான். பெண்சாதி பிள்ளைகளிடத்தில் மமத்துவமில்லாமலும் நான் என்கிற அகங்காரமின்றியுமிருப்பான். துக்கங்களிடத்தும் சுகங்களிடத்தும் சமசித்தம் வாய்ந்தவனாகவும் பூமாதேவியைப் போல் பொறுமை யுடையவனாகவு மிருப்பான். இவன் தான் நம்முடைய பக்தன்.

இன்னும் சதா சந்தோஷமுள்ளவனாகவும் என்னைத் தவிர அர்யமில்லை யென்கிறதில் திடநிச்சயமும் ஆத்மஞானத்தைப் பிரதானமாகக் கொண்டு மனதையும் புத்தியையும் நம்மிடத்தில் சமர்ப்பித்தவனாகவுமிருக்கிறவன் எவனோ அவனே நம்முடைய பக்தன். அவனே நமக்குப் பிரியனுமாவான்.

அருச்சுனா! இன்னும் லோகத்திலுள்ள சகல ஜீவர்களுக்கும்எவனாலே பயமில்லையோ எவனுக்குச் சகல ஜீவர்களாலும் பயமில்லையோ தனக்கு நன்மை சம்பவித்தாற் சந்தோஷமும் பிறருக்கு நன்மை சம்பவித்தாற் பொறாமையுங் குரோதமும் மனச்சோபமு மெவனுக்கில்லையோ அவன்றான்நம்முடைய பக்தன்.

அருச்சுனா! இன்னும் எந்த வஸ்துவையுந் தான் அபேக்ஷியாமலும் பலவந்தமாய் வந்த விஷயங்களிலாசையின்றியும் சோம்பல் பீடைகளில்லாமலும் அகத்தும் புறத்தும் பரிசுத்தமுடையவனாகவும் விநய புத்தியோடு பக்ஷபாதமில்லாதவனாகவும் நன்மையடைவதற்கான எத்தனங்களைத் தவிர மற்ற சர்வ முயற்சிகளையும் விட்டவனாயுமிருப்பவன் எவனோ அவனே நம்முடைய பக்தன்.

அருச்சுனா! இன்னும் பிரியத்தைக் கொடுக்கத்தக்க நல்ல வஸ்துக்கள் வந்தால் அதனால் சந்தோஷியாமலும் அப்பிரியத்தைக்கொடுக்கத்தக்க பொல்லாத விஷயங்கள் வந்தால் அவைகளால் துக்கப்படாமலும் பிரியமான வஸ்துக்கள் வியோகமடைந்தால் சோகத்தையடையாமலும் சுவர்க்கம் முதலானவைகளைக் கோராமலும் சுபாசுப ரூபங்களான புண்ணிய பாபங்களை விட்டு என்னிடத்தில் பக்திசெய்யப்பட்டவனெவனோ அவனே நம்முடைய பக்தனும் பிரியனுமாவான்.

அருச்சுனா! இன்னும் சத்துரு மித்துருக்களிடத்திலும் மான அவமானங்களிடத்தும் சீதோஷ்ண சுகதுக்கங்களிடத்தும் சமசித்தமுடையவனாகவும் நம்முடைய பக்தர்களில்லாத கூட்டத்தைச் சேராமல் விவர்ச்சிதனாயிருக்கப் பட்டவன் எவனோ அவனே நம்முடைய பக்தன்.

அருச்சுனா! இன்னும், ஒருவர் செய்யும்ஸ்துதியிலும்நிந்தையிலும் சமமான மனதுடையவனாகவும் ஏகாந்தத்தையிச்சித்துக்கொண்டிருக்கப்பட்டவனாகவும் தான் ஆசைப்படாமல் தெய்வாதீனமாய் வந்தவைகளைத் தள்ளாமலும் வாராதவைகளைக் கோராமலும் இன்னவிடமிருக்

கிறது இன்னவிடமிருக்கக்கூடாதென்கிற நிலைவரமின்றி யாவற்றினி டத்தும் திருப்தியுடையவனாகவும் ஸ்திர புத்தியுடன் நம்மிடத்திற் சதா பக்தியுடையவனாகவுமிருக்கிறவன் எவனோ அவனே எனக்குப் பக்தனும் பிரியனுமாவான்.

இருவகை யுயிர்க்கு மினியனா யின்ப
துன்பமியா னென்னதென்றறியா
தொரு பொருளாலுங் குறைவுபாடின்றி
யுள்ளமு மொருவழிப் படரப்
பொருவருந் துணையுங் கருணையும் புரிந்து
புலன்றெரி யுணர்வை யென்பாலே
மருவி நின்றொழுகு மியோகி யென்பவன் காண்
மன்ன ! மற்றெனக்கு வேறினியான்.

உலகமுந் தானும் வேறிலாமையினாற்
றானொரு பொருட்கு மஞ்சாதே
யலகிலா வுயிர்கட் கினியனா தலினா
லவைகளுந் தன்னை யஞ்சாதே
புலவரா னவர்கள் புகழுவே நிகழ்வான்
பொறாமையும் மயக்கமுங் களிப்பு
மிலகிடா நெஞ்சத் தியோகியென் பவன்கா
ணியாரினு மெனக்கு வேறினியான்.

ஒன்றினு மாசை யின்றி யிந்தியங்கள்
தம் வழி யொழுகிடா தொருக்கி
நன்றி யினோடு தீங்கினி னைத்து
நல்வினை தீவினை துறந்து
பொன்றினு நோவுற் றழுதல் செய்யாதே
பூரித்தல் வாடுதலின்றி
யென்றுமுன் பிழந்த பொருட்கிரங்காதே
வரும் பொருட் கிச்சை செய்யாதே,

இகழ்பவர் நட்டாரென்ப
தின்றியே யின்ப துன்பந்
திகழவமான மானஞ்
சீதமோடழலின் றீமை

புகழ் பழியி வற்று ளொத்துப்
பொருந்தி வாழிட மொன்றின்றி
நிகழ் தருமியோகி கண்டாய்
மற்றெனக் குரிய நீரான்.

D. அகஸ்தியலிங்கம் பிள்ளை.

சொல்வது வேறு செல்வது வேறு.

ஸ்ரீமாந் C. N. அனந்தராமய்யா சாஸ்திரி அவர்கள் M. A.

(306-வது பக்கத் தொடர்ச்சி).

---

7. முகிலின்பால் மழைக்காக யாராவது இரந்தார்களா? யாரிடத்திலிருந்தாவது அது கைம்மாறுக வுபகாரம் எதிர்பார்க்கிறதா? இஃதிரண்டுமில்லையாயினும் அது மழை யளிக்கும் தன்மையுடைத்தேயாம். இது நிற்க "மழை" என்பதாகவோ "மழை பெய்யும்" என்பதாகவோ ஒரு வார்த்தை தான் சொல்லிவிட்டதால் உலகெலாம் தனக்கடிமையாயினதெனக் குறிசொல்பவன் நினைக்கிறான்.

நற் பிரபுக்கள் தாங்களாகவே பிறர்க்குதவி செய்யுங்கால் நல்வினை செய்தறியாத அவராட்கள், தாங்கள் சொல்லி உதவி நடந்ததெனக் கூறி உலகத்தாரை மயக்குகிறார்கள்.

8. ஒரு மரத்தை நாம் ஆதரிக்கவேண்டுமாயின் அதற்கு நற்சுவையுள்ள காய் இருக்கவேண்டும்; அல்லது மணம்பொருந்தின பூவிருக்கவேண்டும்: அரச மரத்துக்கு இவ்விரண்டும் இல்லை. சில மரங்களின் இலை உணவுப் பதார்த்தங்களை வைத்துண்பதற்கு உதவும்; இம்மர இலையினால் அவ்விதமான பயனும் விளைவதில்லை. நன்மையற்ற இம்மரத்தை மனிதர் ஆராதனைசெய்வதாச்சரியமன்றோ? தன் போக்கே மேலான போக்கென வெண்ணும் விதியின் கொடுமையை யாரிடஞ்சொல்லி யழுவது.

யாதோர் நன்மையுமில்லாது பாக்கியத்தினால் மட்டும் ஜனங்களால் ஆதரிக்கப் பெற்றவர்கள் உலகத்தின்கண் இருக்கிறார்கள் என இவ்வாறியம்பினர்.

9. ஆங்காங் கொழுகும் ஆறுகள் யாவும் கடலிற் கலக்கின்றன. எத்திசையில் நோக்கினும் இக்கடல் பரவியிராநிற்கும். பிரளயமாம் வேளையிலும் இக்கடலுக்கு அழிவில்லை. இஃதுண்மை. ஒருகை ஜலம் குடிக்க ஆவலுடன் வரும் மனிதனுக்கு இதனாலாவ தென்னை?

சில பிரபுக்கட்கு எவ்வளவு பெருமை இருப்பினும் அவர்களால் ஜனங்கட்கு உண்டாகக்கூடும் நன்மையைத் தேடிப் பார்த்துத் தான் சொல்லவேண்டியிருக்கிறது.

10. கரிகட்கதிபதியே! தடாகத்தின் அருகாமையில் நின்று கொண்டே துதிக்கை நீட்டி எவ்வளவு வேண்டுமாயினும் ஜலம் உனக்குக் குடிக்கலாமே; அப்படிக் குடித்தால் உன் தாகம் தீராதா? ஏன் தடாகத்தின் தடத்தையெல்லாம் இடிக்கிறாய்? ஏன் தாமரைகள் அனைத்தையும் பிடுங்கிப் போடுகிறாய்? இதனால் விளையும் கேடு உனக்கே. தாகத்தினாற் பொரிந்துகொண்டு நீ இன்னுமொரு வேளையில் வரும்பொழுது தண்ணீரைத் தேடிப் போகவேண்டியதேயாம்.

எதிர்கலத்தையுங் கருதி அநுபோகங் கொள்ளவேண்டும்.

11. மதக்களிறே! வண்டுகள் அப்பாற் சிறிது தூரம் போவதனால் உனக் கென்ன நஷ்டம்? நீ அவற்றை விலைக்கு வாங்கினையா? நீ விலைக்கு வாங்கியிருந்தாற் கூடவும் பசித்துப் பிராணன் போகும்போது ஓரிடத்திற் கணப்பொழுது தங்கியிருக்குமா? உண்டு குடியிருக்கவொட்டாமல் எப்போதும் விரட்டுகிறாயே. உன்னையும் சேவிக்க முடியுமா? யார் சொன்னால் நீ கேட்கப்போகிறாய்?

சில பிரபுக்கள் அண்டினவர்கட்குத் தாமுமீயார் தங்களைவிட்டுப் போகவும் இடங்கொடார்.

12. காகமே! நீ எவ்வளவு காலம் இங்கு உழல்வாய்? நீ அன்னமாகத் தாமரைக்குளத்திற் புகுந்து தாமரைக்கிழங்குகளைத் தின். உனக்கு அன்னமாவதற்கு என்ன பிரயாசம? சிறிது உன் உடம்பை வெண்மையாக்கவேண்டும், அவ்வளவுதான். பிற்பாடு நீ அன்னம் என்பதில் யாராவது சந்தேகங் கொண்டால் முதற்றண்டனை யான் பெற்றுக்கொள்கிறேன்.

மேன்பாடுடையவரென நடிக்கும் இழிபவரை நகைக்கிறார்.

13. ஊமத்தைச் செடியே! உனக்கு எருவிடுவதில்லை; ஜலம் விடுவதில்லை; தடம் எடுப்பதில்லை; தரை சீர்ப்படுத்துவதுமில்லை. இப்படியிருந்தும் ஓர் நாளிற்றானே இரண்டு மூன்று தடவை நீ பூக்கின்றாய். உனக்கு இந்தச் கெட்ட நாற்றமிராதிருப்பின் பாரிஜாதம் நீயே.

தீயார்க்கு, நல்லார்க்கு நிகரான சாமர்த்திய மிருந்தாலும் நன்மை சற்றுமில்லாமையால் இகழ்ச்சியே பொருந்தும்.

14. இவ்வுடம்பைப் புல்லாகக் கருதிக் கடலின் மத்தியிற் செல்ல வேண்டும். அங்கு உப்புக் காற்றை இரவு பகலாகக் கொள்ளவேண்டும். இதிற் கவலைப்பட்டால் முடியுமா? இல்லத்தில் நல்ல மெத்தையிலுறங்கியெழுந்தக்கால், தானே பொருள் வருமென வெண்ணத் தகுமோ?

15. கடையிற் சுகமாக விருக்கும்போது வியாபாரி ஒன்றுக்கு இருபதாகச் சாமான்களுக்கு விலை கூட்டிக் கூறுவதில் ஆச்சரியமென்ன? கொடுங்காற்றிளகித் தண்ணீரிற் பெருஞ் சுழி பெருகக் கப்பல் முழுகும்போதும் அவன் அவற்றிற்கு விலை குறைப்பனோ?

கெட்டவர்கள் சுகத்திலும் துக்கத்திலும் கெட்டதன்மையை விடார்கள்.

C. N. அனந்தராமய்ய சாஸ்திரி, M. A.

ஐரோப்பிய யுத்தம்.

ஐயகோ! ஐரோப்பா முழுதும் போர்த் தீக்குள்ளாகித் தவிக்கின்றது. ஒப்புயர்வற்ற போர்வீரன் எனப் பெயர்பெற்ற நெப்போலியன் காலத்திற்கிப்பால் இவ்வளவு பயங்கரமான, இவ்வளவு குழப்பமான, இவ்வளவு விரிவான, ஒரு யுத்தம் உலகமுழுதுமே உண்டாயதில்லை. பால்க்கான் யுத்தம் நடந்தகாலத்திலேயே இத்தகைய ஒரு கொடும் போர் உண்டாகுமோ என்று ஐரோப்பிய ராஜ்யதந்திரிகள் சந்தேகித்துக்கொண்டிருந்தனர். அக்காலத்தில் அங்ஙனம் ஒன்றும் உண்டாகாமல் அடங்கிற்றாயினும் இப்பொழுது பதின்மடங்கு சக்தியோடு போர்த்தீ எழும்பிவிட்டது.

காரணம்:- இவ்வளவு பயங்கரமான யுத்தத்திற்கு மூலமாயுள்ள காரணம் அராஜக கட்சியைச் சேர்ந்த ஒரு அறிவில்லாச் சிறுவன் செய்த பாதகமேயாம். சென்ற ஜூன் 28-உ ஆஸ்திரிய இளவரசராகிய ஆர்ச்சு டியூக் பிரான்ஸிஸ் பெர்டினன்றையும் இளவரசியையும், பிரின்சிப் என்னும் பெயருடைய ஒரு சால்வ மாணவன் தீக் குண்டெறிந்து கொலை செய்தான். கொலையுண்ட இளவரசர் ஐரோப்பாவில் பெயர்பெற்ற ஒரு ராஜ்யதந்திரி. இணையில்லாத வீரர். ஆகையால் அவருடைய பரிதாபகரமான மரணத்தினால் ஐரோப்பா முழுதும் கலங்கிற்று. ஐரோப்பியச் சக்ரவர்த்திகளும் அரசர்களும் தங்கள் அனுதாபத்தை ஆஸ்திரியச் சக்ரவர்த்திக்குத் தெரிவித்து, துக்கம் கொண்டாடினார்கள். இளவரசரின் அகால மரணம் ஆஸ்திரிய சக்ரவர்த்திக்குப் பெரும் இடிவான சம்பவம். ஏனெனில் இதற்கு முன்னிருந்த இளவரசரும் இவ்வாறே அபாய மரணத்திற்குள்ளானார். ஆகவே கொடுந்துயரத்துக்குள்ளான ஆஸ்திரியச் சக்ரவர்த்திக்கு ஸெர்வியாவின் மீது கோபமுண்டாவது இயல்பேயன்றோ? ஆகையால் சென்ற ஜூலை 24-உ செர்வியா அரசாங்கத்தாரிடம் ஆஸ்திரியாச் சக்ரவர்த்தி கீழ்வரும் கேள்விகளைக் கேட்டு, அவைகட்குத் திருப்திகரமான பதில் கிடையாவிட்டால் போருக்குப் புறப்படுவதாதவும் அறிவித்தார். கேள்விகளாவன:- (1). ஆஸ்திரியா அரசாங்கத்துக்கு எதிரிடையாய்ப் பேசினதைப்பற்றி வருந்துவதாக வெளிப்படையாய் விளம்பரஞ்செய்யவேண்டும். (2). இப்பாதகக் கொலைக்குக் காரணமானவர்களையெல்லாம் தக்கவாறு தண்டிக்கவேண்டும். (3). ஆஸ்திரியாவுக்கு விரோதிகளான உத்தியோகஸ்தர்களை உத்தியோகத்திலிருந்து உடன் தானே நீக்கவேண்டும். (4). இளவரசரது கொலைக்குக் காரணமாயிருந்து ஏவிய செர்விய மேஜரையும் மற்றும் உத்தியோகஸ்தர்களையும் நாடுகடத்த வேண்டும்.

இக்கேள்விகளுக்கெல்லாம் 25-உ மாலை 6 மணிக்குள் விடை வேண்டப்பட்டிருந்ததினால் செர்விய அரசாங்கத்தார் ருஷிய சக்ரவர்த்தியோடு ஆலோசிக்கலாயினர்.

ருஷிய மந்திரி சபையார் இவ்விஷயத்தைப்பற்றி 4 மணிநேரம் ஆலோசித்தும் ஒருமுடிவுக்கும் வராமல், மறுபடி கொடுக்கக் குறித்த நேரத்தைச் சற்று நீட்டவேண்டுமென்று ஆஸ்திரியாவிடம் கேட்டார்கள். ஆஸ்திரியா அதற்கு இணங்கவில்லை. இதற்குள் செர்வியாவும் சில விடைகளை யனுப்பிற்று. அவை ஆஸ்திரியாவுக்குத் திருப்தியாக

வில்லே. யுத்தமும் தொடங்கிற்று. இவ்வளவோடு நின்றிருந்தால் இந்தச் சண்டை ஐரோப்பா முழுதும் பரவ இடமில்லே. ஜெர்மனி ஆஸ்திரியாவுக்கு உதவியானதே எல்லாத் தீமைக்கும் காரணம். செர்வியர் செய்த பாதகத்துக்கு செர்வியர் உத்தரம் சொல்லவேண்டியது அவர்கள் கடமை. செல்வப்பெருக்கும் உதிரக் கொழுப்புமுடைய ஜெர்மனியின் துராகிருதச் செய்கையே இவ்வளவு கேட்டிற்கும் குழப்பத்திற்கும் காரணமாயிற்று.

தத்துவ அரசுகள் ஏன் கலந்தன?:— ஜெர்மனிக்கும் பிரான்சுக்கும் நெடுங்காலப் பகை யுண்டென்று யாவருமறிவார்கள். 1870-ல் நடந்தேறிய பிரஞ்சு ஜெர்மானிய யுத்தமுதல் அவர்கள் இருவருக்கும் உட்பகை இருந்துகொண்டேவந்தது. ஆங்கிலேய அரசாங்கத்தார் பேரிலும் ஜெர்மனிக்குப் பொறாமையும் மன எரிச்சலும் உண்டாயிருந்தன வென்றும், அவைகளே வெளிப்படையாகக் காட்டும் தருணத்தையே ஜெர்மனி வெகு ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டு இருந்ததென்றும் போர்க்கிளர்ச்சிக்கப்பால் கிடைத்த சமாசாரங்களால் வெளியாகின்றன. இத்தகைய அபாயகாலத்தில் பரஸ்பரம் உதவி செய்யவேண்டுமென்று ஆங்கிலேயருக்கும் பிரான்சியருக்கும் ருஷியருக்கும் முக்கூட்டு உடம்படி முன்னமேயே உண்டு. வெகு காலமாய் எதிர்பார்த்திருந்த தருணம் கிடைத்தவுடனே ஜெர்மனியும் ஆஸ்திரியாவுக்கு உதவி செய்வதுபோல் சேர்ந்து, பிரான்சையும் ருஷியாவையும் எதிர்த்துத் தன் பூர்வ பகையைத் தணிக்கத் தொடங்கிற்று. இரண்டு பேர் தம்முள் முட்டத் தொடங்கும்போது இடையில் நிற்பவனுக்கும் கஷ்டமுண்டாகுமல்லவா. அதுபோலவேபிரான்சுக்கும் ஜெர்மனிகரும் இடையில் கிடக்கும் பெல்ஜியமும் நசுங்கவேண்டியதாயிற்று. தனது படைகளேயும் யுத்தத் தளவாடங்களேயும் பெல்ஜியம் வழியாக பிரான்சுக்குக் கொண்டுபோக சம்மதிக்கவேண்டுமென்று ஜெர்மனி பெல்ஜியத்தைக் கேட்க, பெல்ஜியம் மறுக்க, ஜெர்மனி பெல்ஜியத்தோடு சண்டைக்கு ஆரம்பித்துவிட்டது. ஆங்கிலேய அரசாங்கத்தார் சமாதானத்துக்காக வெகு பிரயாசைப்பட்டார்கள். யுத்தப் பயித்தியம் பிடித்தாடும் ஜெர்மனி ஒன்றுக்கும் சம்மதிக்கவில்லே. கடைசியாக ஆங்கிலேயர் ஆகஸ்டு 4உ மாலே 6 மணிக்கு ஜெர்மனி பேரில் படையெடுப்பதாக விளம்பரம் செய்து யுத்தசன்னுகம் செய்யத் தொடங்கினர். இங்கிலாந்துக்கு வடபாலுள்ள North Sea என்னும் வடக்குக் கடலில் செர்மனிக்கும் ஆங்கிலேயருக்கும் பெரும் கப்பற் சண்டை நடந்துவருகிறது.

கப்பற் போரில் ஆங்கிலேயருக்கு இணையானவர்கள் உலகத்தி லில்லை. அவர்களுடைய கப்பற்படையும் மற்றெல்லாக் கப்பற் படைகளையும் விட தொகையிலும் சக்தியிலும் சிறந்து விளங்குகிறது.

ஆங்கிலேயருக்கு மட்டும் 9000 போர்க் கப்பல்கள் இருக்கின்றன. ஜெர்மனிக்கும் ஆஸ்திரியாவுக்கும் சேர்ந்து மூவாயிரத்துக்குக் கொஞ்சம் குறையாகக் கப்பல்கள் உண்டு. தொகையிலும் சக்தியிலும் பெரிய ஆங்கிலேயப் போர்க் கப்பல்களோடு ருஷியருடையவும் பிரான்ஸியருடையவும் கப்பல்களும் சேர்ந்தால் ஜெர்மனி பாடு திண்டாட்டந்தான். ஜெர்மனி தானாய் தலைமேலிழுத்துப் போட்டுக்கொண்ட அனர்த்தத்தினால் செருக்கு அடங்குமேயன்றி ஆங்கிலேயக் கட்சியாருக்கு ஒரு அபஜெயமும் வரவே வராது.

இந்தியாவின் கடமை.

சகோதரர்களே! அபாயகரமான இந்தத் தருணத்தில் நாம் செய்யவேண்டிய தென்ன? "இராமனுண்டாலென்ன இராவணனுண்டாலென்ன" என்று பராமுகராய் இருக்கவா? பத்திரிகை மூலமாய் யுத்த சமாசாரங்களை அறிந்து மனோல்லாசம் காட்டி மகிழவா? அருமைச் சகோதரர்களே! ஆழ்ந்து சிந்தனை செய்யுங்கள்! சென்ற ஒரு நூற்றாண்டு காலமாக சத்ரு பயமும் திருடர் பயமும் கொடுங்கோன்மைப் பயமும் ஒரு சிறிதும் இல்லாது சமாதானமாக வாழ்வதற்குக் காரணர் யார்? இமயம் முதல் குமரி வரையுள்ள எல்லா ஜனங்களும் சகோதர பாவத்தோடு சண்டை சச்சரவின்றி வாழ்வதற்குக் காரணர் யார்? இந்தியா தேசத்தின்கண்ணுள்ள பற்பல ஜாதியாரும் சமயத்தாரும் தமது இஷ்டப்படி தத்தம் சாதியாசாரங்களையும் சமயாநுஷ்டானங்களையும் கைக்கொண்டொழுகுவதற்குக் காரணம் யார்? அயலூர் செல்வதற்குங் கூட ஆயுதத் துணையும் ஆள்துணையும் தேடியது போக இந்து தேசம் முழுதும் எவ்வித பயமுமின்றி மிகச் சொற்பமான பிரயாணச் செலவில் யாத்திரை செய்வதற்குக் காரணர் யார்? பெரியர் சிறியர் என்னும் வேறுபாடும் "ஒரு குலத்துக் கொரு நீதியும்" இல்லாமல் சம பாவனையோடு இந்தியப் பிரஜைகள் எல்லாம் சுகஜீவிதஞ் செய்வதற்குக் காரணர் யார்? சகோதரர்களே! செவ்வையாக ஆலோசித்துப் பாருங்கள். மேற் கூறிய நன்மைகளுக்கெல்லாம் காரணபூதர் ஆங்கிலேயர்களே!

ஆகையால் அவர்களுடைய வாழ்வில் நம்முடைய வாழ்வும், அவர்களுடைய க்ஷேமத்தில் நம்முடைய க்ஷேமமும் அவர்களுடைய